செ.வெ.எண்:12/அக்டோபர் நாள்: 06.11.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் மூலம் முன்னாள் படைவீரர்கள்/விதவையர்கள் குறித்த விவரங்களை மின்னாளுமை திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர்கள் நலனுக்காக செயல்படுத்தி வரும் அரசு நலத்திட்டங்கள் அனைத்தும் அவர்களுக்கு முழுமையாக சென்றடையும் நோக்கில் முன்னாள் படைவீரர்கள்/விதவையர்கள் குறித்த விவரங்கள் மின் ஆளுமைத் திட்டத்தன் கீழ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பணிகளை 100 சதவீதம் நிறைவேற்றிடும் நோக்கில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இம்முகாமில், முன்னாள் படைவீரர்கள் / விதவையர்கள் பெயர் பதிவுகளை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல், பதிவுகளை சரிபார்த்தல் ( e-governance Validation/ Data Modification ) போன்ற பணிகளுக்காக 11.11.2019 முதல் 15.11.2019 வரையிலான நாட்களில் மாவட்டத்தில் உள்ள 9 வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் முகாம் நடத்தப்பட்டு பொது இ-சேவை மையத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

எனவே, e-governance Validation/ Data Modification செய்யாத முன்னாள் படைவீரர்கள் / விதவையர்கள் அசல் படைவிலகல் சான்று, ஓய்வூதிய ஆணை, அடையாள அட்டை, ஆதார் கார்டு வங்கிக் கணக்குப்புத்தகம், மார்பளவு புகைப்படத்துடன் (Discharge book, PPO, Identity Card, Aadhar card , Bank Pass Book, 2-Passport size photo ) உள்ளிட்ட ஆவணங்களுடன் இம்முகாமில் தங்களது வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள இ-சேவை மையத்தில் நேரில் பங்கேற்று சரிபார்த்துக் கொள்ளலாம்.

இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு துணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், இராமநாதபுரம் அவர்களை நேரிலோ அல்லது தொலைபேசி (தொலைபேசி எண்:04567-230045) வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**